ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரிவு 4

தமிழ் சைவம் இரண்டும் என் இரு கண்கள்; அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன் என வாழ்ந்தவர் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள். அவர் ஈழதிருநாட்டில் , நல்லூரில் 1822 ஆம் ஆண்டு மார்கழி 18 ம் திகதி பிறந்தார். தாயார் பெயர் சிவகாமி. தந்தை பெயர் கந்தர் .

பழங்காலத்தில் இலக்கியங்கள் அனைத்தும் ஏட்டுச்சுவடிகளிலேயே இருந்தன. ஏட்டிலிருந்து அச்சுப் பதிப்பது இலகுவான வேலை அல்ல .அத்தகைய அரிய பணியை ஆற்றிய முன்னோடிகளுள் முதன்மையானவர் ஆறுமுகநாவலர். தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்த பெரும்பணிக்கு அடித்தளம் அமைத்தவரும் இவரே.

இளமையிலேயே தமிழ், ஆங்கில, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளில் நன்கு புலமைபெற்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷன் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார். கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார்.பின்னாளில் நடந்த தீவிர மதமாற்றம் கண்டு வருந்தி சைவசமயச் சிறப்பை எடுத்துக்கூறி பிரசங்கங்கள் செய்தார். பதிப்புப் பணியும் சைவசமயத்தைப் பரப்பும் பணியுமே தமது குறிக்கோள்களாகக் கொண்டார். இலக்கணம், சமயநூல்கள், காப்பியங்கள் எனப் பலவகையாக அவர் இயற்றிய ,உரை செய்த,பரிசோதித்துப் பதிப்பித்த ,யாத்த பாடல்கள் எண்பதிற்கும் மேற்ட்பட்டவை.

தமிழ் உரைநடை இவர் காலத்திற்கு முன் மிகக் கடினமானதாக ,எளிதில் புரிந்துகொள்ள இயலாத வகையில் அமைந்திருந்தது. அதை எளிமையாக்கியவரும் ,ஆங்கிலத்தைப் போல நிறுத்தற்குறிகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவரும் ஆறுமுகநாவலரே. புதிதாக புத்தகவாசிப்பில் ஈடுபடுவோரை முன்னிலைப் படுத்தி இலக்கணத்தையும் சைவசமயத்தையும் பற்றிய பல விளக்கநூல்களை எழுதிய சிறப்பு இவருக்கே உரியது. எனவே இவரை ‘தமிழ் உரைநடையின் தந்தை’ என்று அறிஞர்கள் பாராட்டினர்.

சொற்பொழிவுத் துறையில் முன்னோடிகள் என்று போற்றப்படும் திரு வ.உ. சிதம்பரம்பிள்ளை போன்றோருக்கு எல்லாம் முன்னதாகவே இலங்கையிலும் தமிழகத்திலும் ஈடு இணையற்ற சொற்பொழிவாளராகத்

திகழ்ந்த பெருமை நாவலருக்கே உரியது. இவரது சொற்பொழிவைக் கேட்ட பலர் மது அருந்தும் பழக்கத்தைக் கைவிட்டனர். புதிதாகக் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிச் சென்றிருந்தவர்கள் மீண்டும் சைவ சமயத்திற்கே திரும்பினர்.

அவர் தமிழ் இலக்கிய இலக்கணச் சித்தர்.சாத்திரங்கள், சிவாகமங்கள் கற்றவர்.சிவனடியை மறவாத சிந்தனையாளர்; நல்லாசிரியர்; நூலாசிரியர்; உரையாசிரியர்; பதிப்பாசிரியர்; சொல்லின் செல்வர். தனக்கென வாழாத்தகைமையாளர்.தவக்கோலச்சீலர். இல்லறம் ஏற்காது நற்பணி செய்தவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தது, பெரிய புராண வசனம் எழுதியது அவருடைய பெருமைக்குச் சான்று. அவர் இயற்றிய சைவவினாவிடை,பாலபாடம் என்பன மிகச் சிறந்த சமய வழிகாட்டல் நூல்களாகப் போற்றப்படுகின்றன..அவரிற்கு பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் திருவாவடுதுறை ஆதீனமே அவரது வாக்குதிறனை வியந்து 'நாவலர்' பட்டம் வழங்கி கௌரவித்தது. "தமிழ்க்குலம் உலகப்புகழ் எய்தத் தாழாது செய்யுங்கள் தொண்டு அது ஒன்றே எனக்குத் தமிழர் செய்யும் கைம்மாறு" என்று தன் வாழ்நாள் பூராவும் தமிழிற்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்து 1879 டிசம்பர் 5ல் சிவப்பேறு பெற்றார்.